முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

**முன்னிலை: திருமதி *K*.அறிவொளி,** *M.A., M.L.,*

முதன்மை மாவட்ட நீதிபதி, சிவகங்கை.

2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ம் நாள் வெள்ளிக் கிழமை

இடைநிலை மனு எண்.5/2025 இன் அசல் வழக்கு எண்.104/2023

* * * * *

M.தினேஷ் . . . மனுதாரர்/ பிரதிவாதி

/ எதிர் /

S.மகாலட்சுமி . . . எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் 19.01.2026-ம் தேதி என் முன்பாக இறுதிவிசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ப.சௌந்தரபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.*R.G.*சங்கர் கணேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த நிலையில் இன்று நீதிமன்றம் வழங்கும்...

**உ த் த ர வு**

மனுதாரர் தரப்பில் காலதாமதமாக இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணத்தை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிடக் கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14(2) மற்றும் பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:-**

அசல் வழக்கில் இன்று வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில் வழக்கிற்கு

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.01.23 17:58:42 +0530

தேவையான உயில் ஆவணம் தேடிப் பார்த்ததில் தற்போது தான் கிடைக்கப் பெற்றது என்றும், எனவே தற்போது கிடைக்கப்பெற்ற ஆவணத்தை காலதாமதமாக தாக்கல் செய்வதை ஏற்றுக் கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதியளிக்க வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் இருக்கிறது என்றும், அப்படி செய்வதால் எதிர்மனுதாரருக்கு யாதொரு இழப்பும் ஏற்படக்கூடியதில்லை என்றும், இல்லாவிடில் தனக்கு ஈடு செய்ய இயலாத கஷ்ட, நஷ்டம் ஏற்படும் என்றும், எனவே மனுதாரர் தரப்பில் தற்போது கிடைக்கப் பெற்ற ஆவணத்தை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த உத்தரவிடக் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-</u>**

தாவா மனுவில் கண்டுள்ள சங்கதிகளில் வெளிப்படையாக ஒத்துக்கொள்ளும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் என்றும், மனுதாரர்/பிரதிவாதி 10.12.2020-ம் தேதியிட்ட உயில் பற்றிய விபரங்களை தனது எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும், 10.12.2020 தேதியிட்ட போலி உயிலை உருவாக்க மனுதாரர்/பிரதிவாதிக்கு கால அவகாசம் தேவைப்பட்டதால், எதிர்வழக்குரையில் அதன் தேதியை வசதிக்காக குறிப்பிடாமல் இருந்துள்ளார் என்றும், இதேபோல், எதிர்வழக்குரையை தாக்கல் செய்யும் போது 10.12.2020 தேதியிட்டதாகக் கூறப்படும் உயிலைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்ற விபரத்தை மனுதாரர்/பிரதிவாதியால் நிரூபிக்க முடியாது என்றும், மனுதாரர்/பிரதிவாதிக்கு ஆதரவாக ஒரு உயிலை நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறு இல்லை என்றும், அதைத் தவிர, சாட்சிகளை விசாரித்த பின்னர்

KANNAYEERAM ARIVOLI Digitally signed by KANNAYEERAM ARIVOLI Date: 2026.01.23 17:58:50 +0530

உயிலை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், மேலும் 10.12.2020-ம் தேதியிட்ட உயில் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும், எனவே அதை ஒரு ஆதாரமாகக் குறிக்க முடியாது என்றும், எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**5)** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தற்போது கிடைக்கப் பெற்ற ஆவணத்தை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த வேண்டுமென்று வாதிடப்பட்டது. மாறாக எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தற்போது தேடிப்பார்த்ததில் கிடைக்கப் பெற்றதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 10.12.2020-ம் தேதியிட்ட உயில் பதிவு செய்யப்படாத ஆவணம் என்றும், எனவே அதை ஒரு ஆதாரமாகக் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**6)** இந்நிலையில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படாத நிலையில் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடை நிலை மனு அனுமதிக்கப்பட்டு எதிர்மனுதாரர்/வாதிக்கு அசல் வழக்கினை உரிய வகையில் ஆட்சேபனை செய்ய வாய்ப்பு இருப்பதால் குறிப்பாக இம்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனு குறிப்பிடும் ஆவணம் இவ்வழக்குச் சங்கதிகளுக்கு தொடர்புடையதாகவும், அதிலும்

குறிப்பாக இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்பதையும் கருத்தில் கொண்டு இம்மனுவினை அனுமதிப்பதே மனு பொருண்மைகளின் பேரிலும், நீதியின்பாலும் சரியாக இருக்கும் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

***முடிவாக,*** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரில் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, அதன் பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.01.23 17:59:07 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

<u>**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-**</u> இல்லை

KANNAYEERAM ARIVOLI
Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.01.23 17:59:15 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
சிவகங்கை.
இடைநிலை மனு எண்.5/2025
இன்
அசல் வழக்கு எண்.104/2023
சீரான / வரைவு / உத்தரவு
<u>நாள்: 23.01.2026</u>